மாலை முரசு

பக்கங்கள் 13+3

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | மார்கழி 25 வியாழக்கிழமை 09.01.2025 | அதிர்வு 161

## யாழில் ஹயஸ் மோதி ஒருவர் பரிதாபச் சாவு -சாரதி தப்பியோட்டம்

யாழ்ப்பாணம், புன்னாலைக்கட்டுவன் பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



### இஸ்லாம் மதத்தை அவமதித்த

# ஞானசார தேரருக்கு 9 மாதங்கள் சிறை!

### கொழும்பு நீதிவான் நீதிமன்றம் அதிரடி உத்தரவு

இஸ்லாம் மதத்தை அவமதித்த குற்றத்துக்காகப் பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு 9 மாத சிறைத்தண்டனையை இன்று கொழும்பு நீதிவான் நீதிமன்றம் விதித்துள்ளது.

அத்துடன், 1,500 ரூபா அபராதம் விதிப்பதாகவும் தீர்ப்பை அறிவித்து கொழும்பு மேலதிக நீதிவான் பசன் அமரசேன உத்தரவிட்டுள்ளார்.

குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணைக்கு

02

## மோட்டார் சைக்கிள் மோதி மாற்றுத்திறனாளி மரணம்

### கோமாரிப் பிரதேசத்தில் துயரம்



(வடிவேல் டினேஸ்)

மாற்றுத்திறனாளியான வயோதிபர் ஒருவரைப் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் .

இந்தச் சம்பவம் அம்பாறை மாவட்டம், பொத்துவிலை அடுத்துள்ள கோமாரிப் பிரதேசத்தில் இன்று காலை 6 மணியளவில் இடம்பெற்றது .

கோமாரியைச் சேர்ந்த மாற்றுத்திறனாளியான மென்டிஸ் அப்பு விஜயஸ்ரீ (வயது 71) என்ற வயோதிபரே விபத்தில் பலியானார்.

02

## ஒரு இலட்சம் குடியேறிகள் இலங்கைக்குள் நுழைவர்

### புலனாய்வுத்துறை எச்சரித்துள்ளது என்று அமைச்சர் ஆனந்த தெரிவிப்பு



இலங்கைக்குள் அடுத்துவரும் நாள்களில் ஒரு இலட்சம் வரையான சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் நுழையக்கூடும் என்று புலனாய்வுத் துறை எச்சரித்துள்ளது என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்தார்.

02



# அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 10 இந்திய மீனவர்கள் கைது!

(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 10 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மீன்பிடிப் படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக் கடற்படை மற்றும் கடலோரப் பொலிஸ் படையினர் நேற்று இரவு யாழ். – காரைநகர், கோவளம் கலங்கரை விளக்கத்தில் நடத்திய விசேட சுற்றிவளைப்பின்போதே இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டு மீன்பிடிப் படகுகளின் சட்டவிரோத மீன்பிடி நடைமுறைகளைக் கட்டுப்படுத்த கடற்படை மற்றும் கடலோரப் பொலிஸ் படையினர் இலங்கைக் கடற்பரப்பில் ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன்படி காரைநகர், கோவளம் கலங்கரை விளக்கத்துக்கு அப்பால் இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவதைக் கண்டறிந்த கடற்படை மற்றும் கடலோரப் பொலிஸ் படையினர் இந்திய மீன்பிடிப் படகைக் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக யாழ். கடற்றொழில்நீரியல்வளத்திணைக்களத் தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### யாழில் ஹயஸ்...

புத்தூரில் இருந்து சுன்னாகம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த ஹயஸ் வாகனம், பலாலியில் இருந்து ஏழாலை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை ஜெய்சங்கர் (60 வயது) என்பவர் உயிரிழந்துள்ளார்.

விபத்தையடுத்து ஹயஸ் வாகனத்தின் சாரதி தப்பிச் சென்றுள்ளார்.

இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### மோட்டார் சைக்கிள்...

பல வருடங்களாக அவர் பிரதான வீதியில் கோமாரி மகா வித்தியாலயத்திற்கும் தபாலகத்திற்கும் இடையே உள்ள மரத்தின் கீழ் மூன்று சக்கர சைக்கிளில் வந்து நிற்பது வழக்கம். செருப்புத் தைப்பதும் குடை திருத்துவதும் அவரின் தொழில் ஆகும்.

இரண்டு கால்களும் இயலாத மாற்றுத் திறனாளியான அவர் மூன்று சக்கர சைக்கிளில் வீட்டில் இருந்து வந்து பிரதான வீதியில் கடை ஒன்றில் தேநீர் அருந்திவிட்டுச் சென்றபோது பின்னால் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் அவரின் மீது மோதியது. அந்தக் கணத்தில் அவர் தூக்கி எறியப்பட்டு அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

சடலம் பொத்துவில் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளைப் பொத்துவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### ஒரு இலட்சம்...

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

“கடந்த சில நாள்களுக்கு முன்னர் இலங்கைக்குள் மியான்மரைச் சேர்ந்த 116 சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் (ரோஹிங்யர்கள்) நுழைந்துள்ளனர். எனவே, அது தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. படகுப் போக்குவரத்துக்காகப் பெருந்தொகைப் பணத்தை வழங்கிவிட்டே அவர்கள் மியான்மரில் இருந்து வெளியேறியுள்ளனர்.

பொலிஸார் முன்னெடுக்கும் விசாரணை மற்றும் புலனாய்வுப் பிரிவினரின் தகவல்களுக்கு அமைய அடுத்த சில நாள்களுக்குள் ஒரு இலட்சம் சட்டவிரோதக் குடியேறிகள் இலங்கைக்குள் நுழைவதற்குச் சாத்தியங்கள் உள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு அவர்கள் இலங்கைக்குள் வந்தால், அது எமக்கு பெரும் பிரச்சினையாகவே அமையும். எனவே, அது தொடர்பில் நாம் அவதானம் செலுத்தியுள்ளோம். புலனாய்வுப் பிரிவினர் வழங்கிய தகவல்கள் தொடர்பில் தீவிரமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.” – என்றார்.

### ஞானசார தேரருக்கு...

நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியமையால் முன்னர் பிறப்பிக்கப்பட்ட பிடியாணையை அடுத்தே அவருக்கு மேற்படி தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16 ஆம் திகதி கிருலப்பனையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், “இஸ்லாம் ஒரு புற்றுநோய். அதைத் துடைத்தெறிய வேண்டும்.” – என்று ஞானசார தேரர் கூறியிருந்தார்.

ஞானசார தேரரின் இந்தக் கூற்று இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் செயல் என்று குற்றம் சாட்டி குற்றவியல் சட்டத்தின் 291ஆவது பிரிவின் கீழ் பொலிஸார் மேற்படி வழக்கைத் தாக்கல் செய்திருந்தனர்.



# வவுனியாவில் மரக்கடத்தல் முறியடிப்பு

**(கி.வசந்தன்)**

வவுனியா, மரக்காரம்பளையில் மரக்கடத்தலை முறியடியத்துள்ளதாக நெளுக்குளம் பொலிஸார் இன்று தெரிவித்தனர்.

வவுனியா, மரக்காரம்பளை பகுதியில் சந்தேகத்துக்கிடமாக மரங்களை ஏற்றிச் சென்ற ஜீப் ரக வாகனத்தை நெளுக்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திவுல்வெவ தலைமையிலான போக்குவரத்துப் பொலிஸார் சோதனை செய்தபோது சுமார் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான 72 மரங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன், மரக்கடத்தலுக்குப் பயன்படுத்திய ஜீப் ரக வாகனமும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டதுடன், சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்.



# சிறுவர் இல்லத்தைப் பார்வையிட்ட வடக்கு ஆளுநர்

வடக்கு மாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்புத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் கைதடி அரச சிறுவர் பொறுப்பேற்கும் இல்லத்தை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் இன்று பார்வையிட்டார். வடக்கு மாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்புத் திணைக்களத்தின் ஆணையாளர் திருமதி சுஜீவா சிவதாஸ், இல்லத்தின் தேவைப்பாடுகள் தொடர்பில் ஆளுநருக்குத் தெரியப்படுத்தினார்.





# சுண்ணக்கல் அகழ்வில் சட்டவிரோத செயற்பாடுகள் யாவுமே உடனடியாக நிறுத்தப்படுதல் மிக முக்கியம்

## சூழலியலாளர் பொ. ஐங்கரநேசன் கோரிக்கை

யாழ்ப்பாணக் குடாநாடு கடலாலும், கடல் நீரேரிகளாலும் சூழப்பட்ட ஒரு தீபகற்பம். பூமி வெப்பமடைவதன் விளைவாக ஏற்பட்டுவரும் கடல்மட்ட உயர்வு குடாநாட்டைப் பெருமளவு பாதிக்கும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. இந்நிலையில், கட்டுப்பாடற்ற சட்டவிரோத சுண்ணாம்பு அகழ்வு காலநிலை மாற்றத்தால் ஏற்படவுள்ள பாதகங்களை மேலும் விரைவுபடுத்தும், அதிகப்படுத்தும். இவற்றைக் கருத்திற் கொண்டு விவசாய நடவடிக்கையைப் பாதிக்காத வகையில் சுண்ணாம்புக்கல் அகழ்வை நெறிப்படுத்துவதோடு, இதில் நிலவக்கூடிய சட்டவிரோதச் செயற்பாடுகள் அனைத்தும் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடமாகாண ஆளுநரிடம் சட்டவிரோத சுண்ணக்கல் அகழ்வை முடிவுறுத்தக்கோரி பொ. ஐங்கரநேசன் இன்று வியாழக்கிழமை மனுவொன்றைச் சமர்ப்பித்த பின்னர் நிகழ்த்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் –


இலங்கையில் சுண்ணாம்புக்கல் வடமேற்கு மாகாணத்திலும், வடக்கு மாகாணத்திலும் கரையோரத்தை அண்டிக் காணப்படும் ஒரு இயற்கை வளமாகும். புவிச்சரித வரலாற்றில் பல மில்லியன் வருடங்களுக்கு முற்பட்ட மயோசின் காலத்தில் கடலின் அடித்தளப் படிவுகளாகத் தோற்றம்பெற்ற இப்பாறைகள் சீமெந்து தயாரிப்பிலும், இதர கட்டுமானங்களிலும் பிரதான மூலப் பொருளாக விளங்குகின்றது. கூடவே, சூழலியல் ரீதியாகக் கடல் நீர் நிலத்தடி நீருடன் கலப்பதைத் தடைசெய்வதிலும், நிலத்தடி நீரோட்டத்திலும் மிகவும் இன்றியமையாத பங்களிப்பையும் வழங்கி வருகிறது.

சமீப நாள்களாகச் சுண்ணாம்புக்கல் அகழ்வும் அதனை வேறு மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்வதும் பெரும் சர்ச்சைகளைத் தோற்றுவித்துள்ளது. சுண்ணாம்புக்கல் அகழ்வு பயிர்ச்செய்கைக்காக இரண்டடி ஆழம் வரையில் கிளறி எடுத்தல் என்ற நிலையில் இருந்து, இன்று சீமெந்து தயாரிப்புக்காகக் கனரக வாகனங்களைக் கொண்டு அகழ்ந்தெடுத்தல் என்ற நிலைக்கு மாறியுள்ளது. குறிப்பாக, தென்மராட்சி சரசாலையில் அனுமதியின்றிச் சட்டவிரோதமாக அரச காணிகளிலும், தனியார் காணிகளிலும் பாரிய அளவில்சுண்ணாம்புக்கல்அகழ்வு இரவு நேரங்களில் இடம்பெற்று வருகிறது.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை இயக்கப்படாதிருப்பதற்குச் சுண்ணாம்புக் கல்லைப் பெறுவதில் உள்ள இடர்பாடுகளே காரணம். கீரிமலையில் சுண்ணாம்புக்கல் அகழ்வில் ஏற்பட்ட பிரமாண்ட குழிகள் இன்னமும் மூடப்படாத நிலையில் இனிமேலும் அகழ்வைத் தொடர்வது சூழல் ரீதியாகப் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதால் கிளிங்கர்களை எடுத்துவந்து, சீமெந்துத் தொழிற்சாலையை மீள இயக்க முடியும் என்று யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் முடிவு எட்டப்பட்டுள்ளது. இந்நிலையில் இங்கிருந்து வேறு மாவட்டங்களுக்குச் சுண்ணாம்புக் கல்லை எடுத்துச்செல்வது மக்களிடையே கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

நொறுக்கப்பட்ட சுண்ணாம்புக் கற்களை அரைத் தயாரிப்பாகவோ அல்லது முடிக்கப்பட்ட தயாரிப்புகளாகவோ கருதமுடியாது என்பதால் இதனை எடுத்துச் செல்வதற்குப் போக்குவரத்து உரிமம் அவசியம் எனப் புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம் யாழ். மாவட்டச் செயலருக்குத் தெளிவுபடுத்தியுள்ளது. இந்நிலையில், யாழ்ப்பாணத்தில் இருந்து சுண்ணாம்புக்கல் வெளிமாட்டங்களுக்குத் தங்கு தடையில்லாமல் எடுத்துச் செல்லப்படுகிறது. ஆளுநர் உடனடியாக சுண்ணக்கல் அகழ்வில் நிலவும் சட்டவிரோத செயற்பாடுகளைக் களைய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.




EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# குடா நாட்டைக் காப்போம்!

யாழ்ப்பாணம் குடாநாட்டில் சுண்ணாம்புக்கல் அகழ்வு தொடர்பான உண்மை நிலையை - கள யதார்த்தத்தை - அப்பட்டமாக வெளிப்படுத்தி இருக்கிறார் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் சூழலியலாளருமான ஐங்கரநேசன்.

சட்டத்தில் உள்ள ஓட்டைகளையும் அதிகார மற்றும் நீதி, நிர்வாகத் தரப்பினரின் பொறுப்பற்ற போக்கையும் பயன்படுத்திக் கொண்டு குடாநாட்டைக் கபளீகரம் பண்ணும் - சூறையாடும் - பெரும் தந்திரம் கட்டவிழ்வதை அவரின் கருத்துரை ஊடாக உணர்ந்து கொள்ள முடிகிறது.

தமிழர் தேசத்தின் மூளை மையத்தின் மூலவளத்தை - இயற்கைப் பாதுகாப்பு அரணை - நிதிப் பெறுமதிக்காக - தனித் தரப்புகளின் வருமானத்திற்காக - சூறையாடும் தந்திரம் நமது தாயகத்தின் பேரழிவுக்கு வழி செய்யும் மிக மோசமான வேலையாகும். தாயக மண்ணின் இயற்கைப் பாதுகாப்பை தனி வருமானங்களுக்காகச் சீரழிப்பது பெற்ற தாயைச் சீரழிப்பதற்கு ஒப்பானதாகும். கண்ணை விற்றுச் சித்திரம் வாங்கும் முட்டாள்தனமாகும்.

பல்லாயிரம் வடக்கு தமிழர்களுக்கு வேலை வாய்ப்பு மையமாக இருந்த காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையை என்ன காரணத்துக்காக இயக்காமல் - மீள ஆரம்பிக்காமல் - தடுத்து வைத்திருக்கின்றோமோ, அந்தக் காரணத்தை பின் கதவால், ஒளிவுமறைவாகச் செய்யும் மிக மோசமான அயோக்கியத்தனம் இந்த சுண்ணாம்புக்கல் அகழ்வு விடயத்தில் முன்னெடுக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணக் குடாநாடு கடலாலும், கடல் நீரேரிகளாலும் சூழப்பட்ட ஒரு தீபகற்பம். பூமி வெப்பமடைவதன் விளைவாக ஏற்பட்டுவரும் கடல்மட்ட உயர்வு குடாநாட்டைப் பெருமளவு பாதிக்கும் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது. கடல் நீர் குடாநாட்டின் நிலத்தடி நீருடன் கலக்கும் ஆபத்தும் அதிகம் உண்டு.

இந்நிலையில், கட்டுப்பாடற்ற சட்டவிரோத சுண்ணாம்பு அகழ்வு காலநிலை மாற்றத்தால் ஏற்படவுள்ள பாதகங்களை மேலும் விரைவுபடுத்தும், அதிகப்படுத்தும். இவற்றைக் கருத்திற்கொண்டு விவசாய நடவடிக்கையைப் பாதிக்காத வகையில் சுண்ணாம்புக்கல் அகழ்வை நெறிப்படுத்துவதோடு, இதில் நிலவக் கூடிய சட்டவிரோதச் செயற்பாடுகள் அனைத்தும் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன் விடுத்துள்ள கோரிக்கை அறிவியல் ரீதியான முக்கிய ஆலோசனையாகும்.

இலங்கையில் சுண்ணாம்புக்கல் வடமேற்கு மாகாணத்திலும், வடக்கு மாகாணத்திலும் கரையோரத்தை அண்டிக் காணப்படும் ஓர் இயற்கை வளமாகும். புவிச்சரித வரலாற்றில் பல மில்லியன் வருடங்களுக்கு முற்பட்ட மயோசின் காலத்தில் கடலின் அடித்தளப் படிவுகளாகத் தோற்றம்பெற்ற இப்பாறைகள் சீமெந்து தயாரிப்பிலும், இதர கட்டுமானங்களிலும் பிரதான மூலப் பொருளாக விளங்குகின்றன. கூடவே, சூழலியல் ரீதியாகக் கடல் நீர் நிலத்தடி நீருடன் கலப்பதைத் தடைசெய்வதிலும், நிலத்தடி நீரோட்டத்திலும் மிகவும் இன்றியமையாத பங்களிப்பையும் வழங்கி வருகின்றன.

இந்த சுண்ணாம்புக்கல் அகழ்வு பயிர்ச் செய்கைக்காக இரண்டடி ஆழம் வரையில் கிளறி எடுத்தல் என்ற நிலையில் இருந்து, இன்று சீமெந்து தயாரிப்புக்காகக் கனரக வாகனங்களைக் கொண்டு அகழ்ந்தெடுத்தல் என்ற நிலைக்கு மாறியுள்ளது. குறிப்பாக, தென்மராட்சி சரசாலையில் அனுமதியின்றிச் சட்டவிரோதமாக அரச காணிகளிலும், தனியார் காணிகளிலும் பாரிய அளவில் சுண்ணாம்புக்கல் அகழ்வு இரவு நேரங்களில் இடம்பெற்று வருகிறது.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலைக்காக கீரிமலையில் சுண்ணாம்புக்கல் அகழ்வில் ஏற்பட்ட பிரமாண்ட குழிகள் இன்னமும் மூடப்படாத நிலையில் இனிமேலும் அகழ்வைத் தொடர்வது சூழல் ரீதியாகப் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதால் கிளிங்கர்களை வெளியில் இருந்து எடுத்துவந்து, சீமெந்துத் தொழிற்சாலையை மீள இயக்க முடியும் என்று யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் முடிவு எட்டப்பட்டுள்ளது. இந்நிலையில் இங்கிருந்து சுண்ணாம்புக் கல்லை ஆழ அகழ்ந்து வேறு மாவட்டங்களுக்குச் எடுத்துச்செல்வது மிகவும் மோசமான செயலாகும்.

இயற்கைச் சூழலை - சமநிலையை - சூறையாடிக் கெடுக்கும் இந்த முட்டாள்தன நடவடிக்கை முழு அளவில் - முற்றாக - தடுக்கப்பட வேண்டும்.







# திருகோணமலை மாவட்டத்தின் புதிய அரச அதிபர் கடமையேற்பு

**(எஸ்.கீதபொன்கலன்)**

திருகோணமலை மாவட்ட அரச அதிபராக இலங்கை நிர்வாக சேவையின் விசேட தர அதிகாரி டபிள்யூ. ஜி. எம். ஹேமந்த குமார இன்று (09) மாவட்ட செயலகத்தில் தனது கடமைகளை உத்தியோக பூர்வமாகப் பொறுப் பேற்றார். சர்வ மத தலைவர்களின் ஆசீர்வா தங்களுக்கு மத்தியில் தனது கடமை களை உத்தியோக பூர்வமாகப் பொறுப் பேற்றார்.

2003.09.02 ஆம் திகதி இலங்கை நிர்வாக சேவைக்குத் தெரிவு செய்யப்பட்ட இவர் தெஹியத்தகண்டிய உதவி பிரதேச செயலாளர், பிரதேச செயலாளர், மத்திய மாகாண கைத்தொழில் அமைச்சின் உதவி செயலாளர், மத்திய மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர்,மத்திய மாகாண விளையாட்டு திணைக்கள பணிப்பாளர் (பதில் கடமை), ஹதரலியத்த மற்றும் தும்பன பிரதேச செயலாளர் ஆகிய பதவிகளை வகித்துள்ளார். அரச அதிபர் பதவிக்கு நியமிக்கப்பட முன்னர் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் மேலதிக பணிப்பா ளர் நாயகமாக இவர் கடமை யாற்றியுள்ளார்.











# சாதனையாளர்கள், வீரர்கள் கௌரவிப்பு

(காரைதீவு சகா)

கிழக்கின் பழம் பெரும் கழகமான காரைதீவு விளையாட்டு கழகம் மற்றும் விபுலானந்தா சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் மற்றும் கழக இரவு 2024 இற்கான தலைவர் எந்திரி வி. விஜயசாந்தன் தலைமையில் கடந்த சனிக்கிழமை கழகத் தலைமையகத்தில் நடைபெற்றது. கழக போசகர்கள் முன்னாள் தலைவர் மற்றும் சாதனை வீரர்கள் இதன்போது பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

கழகத்தின் போஷகர் சிவ.ஜெகராஜன் அம்பாறை மாவட்ட மேலதிக அர அதிபராக பதவி உயர்வு பெற்றமைக்கும், கழக போசகர் விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா கிழக்கு மாகாண அதி உயர் விருதான “வித்தகர்” விருதைப் பெற்ற மைக்கும், முன்னாள் தலைவர் எஸ்.ரகுநாதன் இலங்கை அதிபர் சேவையின் முதலாம் தரத்துக்குப் பதவி உயர்வு பெற்றமைக்கும் பொன்னாடை போர்த்தி பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

அதேவேளை சாதனை வீரர்களுக்கு கௌரவிப்பு இடம்பெற்றது.

கழகத்தின் நடப்பாட்டில் விளையாட்டுத்துறையில் பிரகாசித்த வீரர்களுக்கான கௌரவிப்புக்கள் இடம்பெற்றன.

கிரிகெட் கடினபந்து அதிகூடிய ஓட்டம் – ஏ.லோகதாஸ்,



கிரிகெட் கடினபந்து அதிகூடிய விக்கெட் – பி.சுலக்ஷன், கிரிகெட் மென்பந்து வளர்ந்துவரும் வீரர் – எம். தசாந், பூப்பந்தாட்டம் வளர்ந்துவரும் வீரர் – எஸ் நிதுர்சன், கரப்பந்தாட்டம் வளர்ந்துவரும் வீரர் – கே. டலோஜன், உதைபந்தாட்டம் வளர்ந்துவரும் வீரர் – கே. திசோர், கூடைபந்தாட்டம் வளர்ந்துவரும் வீரர் – எஸ்.சினோஜன், மெய்வல்லுனர் வளர்ந்துவரும் வீரர் – எஸ். கிரிசாந் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.





# திருகோணமலையில் ஆலயங்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவிகள்

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமம் திருகோணமலை ஆலயங்களுக்கு 3 லட்சம் ரூபா நிதி உதவியை வழங்கியுள்ளது

திருகோணமலை, மூதூர் 02, பாலநகர் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய கட்டட கட்டுமானப் பணிக்காக ஒரு லட்சம் ரூபா நிதியும், திருகோணமலை, செல்வநாயகபுரம், உதயபுரி சுவாமி தந்திரதேவா குன்றம் ஸ்ரீ லிங்கேஸ்வரர் ஆலய கட்டட கட்டுமானப் பணிக்காக முதலாம் கட்ட நிதியாக 2 லட்சம் ரூபாவும் நேற்று (08) புதன்கிழமை ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள், தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கினார்.

அத்தோடு சந்நிதியான் ஆச்சிரமம் கல்விச் செயற்றிட்ட உதவிகளாக திருகோணமலையில் விவேகானந்தா கல்லூரி, சிங்கள மகா வித்தியாலயம், உவர்மலை விவேகானந்த கல்லூரி, அபேயபுர ஆரம்ப பாடசாலை, கோனேஸ்வரா இந்துக் கல்லூரி, செல்வநாயகபுரம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்கும் 13 மாணவர்களுக்கு 53 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

திருகோணமலை, ஈச்சிலம்பற்று, விநாயகபுரம் ஸ்ரீ மாணிக்க விநாயகர் அறநெறிப் பாடசாலையின் கோரிக்கைக்கு அமைவாக, நேரடியாகச்சென்று பார்வையிட்டு அறநெறி மாணவர்களுக்கான சீருடைகள், மாதாந்த சத்துணவு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் அடிப்படை வசதிகளான குடி தண்ணீர் விநியோகம் மற்றும் மலசலகூடம் அமைத்து வழங்கவும் தீர்மானிக்கப்பட்டன.



# கடல் வழியாக தமிழகம் சென்ற 13 குடும்பங்கள் மீண்டும் இலங்கைக்கு அனுப்பக் கோரி மனு!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

இலங்கையில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் இருந்து கடல் வழியாக தமிழகத்தில் தஞ்சம் அடைந்த 13 குடும்பங்களைச் சேர்ந்த இலங்கை அகதிகளை தம்மை மீண்டும் இலங் கைக்கு திருப்பி அனுப்பி வைக்க வேண் டும் என்று ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரிடம் மனு ஒன்றைக் கையளித் துள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கை தமிழர்கள் கடந்த 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதி முதல் இலங்கையில் இருந்து படகு வழியாக சட்ட விரோதமான முறையில் தனுஷ் கோடியில் தஞ்சம் அடைந்தனர்.

இதுவரை 309 இலங்கை தமிழர்கள் தனுஷ்கோடியில் கடல் வழியாக அகதிக ளாக தஞ்சமடைந்து மண்டபம் ஈழத்த மிழர் மறுவாழ்வு முகாமில் தங்க வைக் கப்பட்டுள்ளனர்.

இதில் பொருளாதார நெருக்கடி காரணமாக தஞ்சமடைந்த இலங்கை தமிழர்களை அகதிகளாக இந்திய அரசு இதுவரை பதிவு செய்யாத கார ணத்தால் இவர்களுக்கு இந்திய அர சால் வழங்கப்படும் எந்த விதமான நிவாரணம் கிடைக்கவில்லை என தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் வருவாய் இன்றி தவித்த இலங்கை தமிழர்கள் ஐந்து குடும்பத்தினர் மீண்டும் சட்டவிரோதமாக கடல் வழியாக அண்மையில் இலங்கைக்கு திரும்பியுள்ளனர் என்று தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

அகதிகளாகப் பதிவு செய்யாமல் உள்ள இலங்கைத் தமிழர்கள் 13 குடும்பத்தினரை படகு மூலம் அல்லது விமானம் மூலம் மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைக்குமாறு மாவட்ட ஆட்சியரை சந்தித்து பாதிக்கப்பட்ட இலங்கை அகதிகள் மனு கையளித் துள்ளனர்.







# சுகாதாரத்துறைக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றியோருக்கு பாராட்டு





(ஏ.எல்.றியாஸ்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் 2024 ஆம் ஆண்டில் சிறப்பாக பணியாற்றிய பிராந்திய பிரிவுத் தலைவர்கள் மற்றும் பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் பாராட்டிக் கௌரவிக் கப்பட்டனர்.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிராந்திய பிரிவுத் தலைவர்கள், பணி மனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கந்துகொண்டனர்.

இதன்போது பிராந்திய பணிப்பாளர் 2024 ஆண்டில் சிறப்பாக பணியாற்றிய சகலரையும் பாராட்டி நினைவுச் சின்னம் மற்றும் சான்றிதழ் வழங்கிக் கௌரவித்தார்.





# கிழக்கு மாகாணத்தில் மிகப்பெரிய சோலர் அமைப்பு ஆரையம்பதியில் திறந்து வைப்பு!

(பழுவூரான்)

மட்டக்களப்பு ஆரையம்பதி பிரதேச செயலகப் பிரிவில் இயங்கி வரும் அல்ட்றா அலுமினியம் தனியார் நிறுவனம் கிழக்கிலங்கையில் மிகப் பெரிய சோலார் அமைப்பை நிறுவித் திறந்து வைத்துள்ளது.

சூரிய சக்தியைப் பயன்படுத்தி 2 மெகாவோட் மின் உற்பத்தியை மேற்கொள்ளும் கூரை மீதான சோலார் அமைப்பை இந்த நிறுவனம் நிறுவியுள்ளது.

இதன் செயற்பாட்டை இலங்கை மின்சார சபையின் கிழக்குப் பிராந்திய பிரதிப் பொது முகாமையாளர் டபில்யூ.எஸ்.எல்.ஏ. விஜயதுங்க பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு திறந்து வைத்தார்.



அலுமினிய கட்டுமான உதிரிப்பாகங்களை உற்பத்தி செய்யும் இத்தொழிற்சாலைக்குத் தேவையான மின்சாரம் இந்தத் திட்டத்தின் ஊடாக இவர்களுக்குக் கிடைக்கின்றது. இதனூடாக ஓர் ஆண்டில் 2.9 மில்லியன் கிலோ வோட் அளவிலான மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது.

இந்த நிறுவனத்தின் தலைவர் ஏ.எம். உனைஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஹயர் எனர்ஜி நிறுவனத்தின் பணிப்பாளர் கலீல் மஜீட், கிழக்கு மாகாண ஆளுநரின் பிரத்தியேகச் செயலாளர் அப்துல்லாஹ் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

# பிடித்துவைத்தல் வரியை அதிகரித்து மக்களின் வயிற்றில் அடிக்கிறது அரசு

## மொட்டுக் கட்சியின் அமைப்பாளர் கீதநாத் குற்றச்சாட்டு

வங்கி சேமிப்பு மற்றும் நிலையான வைப்பு மூலம் வாழ்க்கை நடத்தும் நடுத்தர மக்களின் வயிற்றில் அடிக்கும் அரசியலை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மேற்கொள்வதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் யாழ் மாவட்ட பிரதான அமைப்பாளர் கீதநாத் காசிலிங்கம் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஐந்து வீதமாக இருந்த *withholding tax* பத்து வீதமாக உயர்த்தப்பட்டமை குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில், 'தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் "பிடித்துவைத்தல் வரியை" *(withholding tax)* ஐந்து வீதத்தில் இருந்து பத்து வீதமாக அதிகரித்துள்ளமை ரணிலின் அரசை விட மோசமான மக்களின் வயிற்றில் அடிக்கும் ஒரு செயலாகும்.




முன்னரை விட வரிச்சுமையை ஏற்றி, விடிவுக்காய் மாற்றுத்துக்காய் காத்திருந்த மக்களுக்கு வாழவிடாமல் செய்கிறதா இந்த அரசு?

ரணில் விக்கிரமசிங்க ஆட்சியில் பிடித்துவைத்தல் வரி ஐந்து வீதத்தில் இருந்த போது ஆர்ப்பாட்டம் நடத்திய தேசிய மக்கள் சக்தி, இன்று ஆட்சிக்கு வந்து பத்து வீதமாக அதனை உயர்த்தியது ஒரு பச்சை நம்பிக்கை துரோகம்.

மாத வருமானம் ரூ.150,000 வரை வரி இல்லை எனும் நிலையில் சேமிப்பில் இருந்தும், நிலையான வைப்பில் இருந்தும் வாழ்க்கையை நடத்தும் பல நடுத்தர வர்க்க மக்களின் சோற்றில் மண் அள்ளிப்போடுவது முறையா?' – என அவர் மேலும் சாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோதமான செயற்பாடுகளை யாழ்ப்பாணத்தில் ஒழித்தே தீருவோம்

## அமைச்சர் சந்திரசேகரன் நம்பிக்கை

(த.சுபேசன்)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்று வருகின்ற சட்டவிரோதச் செயற்பாடுகள் அனைத்தையும் ஒழிப்போம் என்று கடற்தொழில் அமைச்சர் சந்திரசேகரன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

தென்மராட்சிப் பகுதியில் சுண்ணக் கல் அகழ்வு இடம்பெற்ற இடங்களைப் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத் துத் தெரிவிக்கையில்,

யாழில் இருந்து சுண்ணக்கல் ஏற்றிச் சென்றபோது, நாடாளுமன்ற உறுப்பி னர் இளங்குமரன் வழிமறித்து அந்த லொறியை பொலிஸாரிடம் ஒப்படைத் துள்ளார். இந்த விடயமானது கடந்த சில தினங்களாக ஊடகங்களில் பரவ லாக பேசப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இருந்து சுண்ணக் கல் ஏற்றி வந்த பார ஊர்தி விடயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் இளங் குமரனின் செயற்பாடு வரவேற்கத்தக்கது.

இந்த நிலையில் நீங்கள் செய்தது தவறு, குற்றச்செயல்கள் இடம்பெறும் போது அவற்றைப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தி, அவர்கள் மூலமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என நான் இளங்குமரனுக்கு அறிவுறுத் தினேன்.

ஆனால் தற்போது பார்க்கும் போது இளங்குமரன் செய்தது பரவாயில்லை அல்லது நல்லது என்று தோன்றுகிறது. இளங்குமரனின் இந்த வேலையால் அனைவரும் கலக்கமடைந்திருப்பதை அவதானிக்க முடிகிறது. வெட்ட வெட்ட



பூதம் கிளம்பியது போல இன்னும் பல பிரச்சினைகள் வெளிவருகின்றன.

சரசாலை பகுதியில் சட்டரீதியான வேலைகள், சட்ட ரீதியற்ற வேலைகள் இடம்பெறுகின்றன. தனியார் காணி களில் அகழ்வுகள் இடம்பெறுகின்றன. அதற்கு அனுமதிகள் வழங்கப்பட்டுள் ளன. அதற்கு அருகாமையில் அரச காணிகள் உள்ளன. அதில் அனுமதி பெறப்படாமல் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இவற்றை எல்லாம் பார்க்கும் வேளையில் சட்ட விரோதமான செயற்பாடுகள் இடம்பெறு கின்றது என்பதை ஊகித்துக் கொள்ள முடிகின்றது.

இந்த விடயத்தில் பொறுப்பு கூற வேண்டியவர்கள் இந்த தொழிலை புரிகின்ற வியாபாரிகளோ, தொழில்புரி கின்ற ஊழியர்களோ அல்ல. மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலர், கிராம செயலர், புவிச்சரிதவியல் திணைக்கள அதிகாரிகள் ஆகியோரே இதற்கு பொறுப்பு கூற வேண்டும். அரச அதிகாரி கள் சரியாக செயல்படவில்லை என்று குற்றச்சாட்டை முன்வைக்கிறேன்.

அத்துடன் இது குறித்து விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்கவும் விளைகிறேன்.

சரசாலையில் உள்ள சுண்ணக் கல்லுக்கும் இளங்குமரன் எம்.பி. மறித்த லொறியில் இருந்த சுண்ணக்கல்லுக்கும் இடையே வித்தியாசம் இருக்கின்றது. அப்படியாயின் யாழ்ப்பாண மாவட்டம் முழுவதும் இந்த திருட்டுத் தொழில் இடம்பெறுகின்றதா என்று கேள்வி எழுகின்றது.

ஒரு சிலர் வந்து, இவ்வாறான நடவ டிக்கைகள் எடுப்பதால் தொழில் இல்லா மல் போகின்றது, வாழ்வாதாரம் பாதிக் கப்படுகிறது, மக்கள் பாதிக்கப்படுகின் றார்கள் என்ற குற்றச்சாட்டை முன்வைக் கின்றார்கள். ஆனால் இவ்வாறான அகழ்வுகள் மூலமாக ஏற்படும் அனர்த் தங்களுக்கு பல பரம்பரைகள் பலியாகும் என்ற விடயத்தை நாங்கள் மறந்து விடக்கூடாது. ஒரு சில வியாபாரிகளின் பணப் பசியை போக்கும் தேவைக்காக இந்த செயற்பாடுகள் இடம்பெறுமாக இருந்தால் எமது அரசால் இது தடுத்து நிறுத்தப்படும்.– என்றார்.

# கோமாரி விபத்தில் மாற்றுத் திறனாளி பலி!

(வி.ரி. சகாதேவராஜா)

வீதியில் மூன்று சில்லுச் சைக்கிளில் வந்த மாற்றுத் திறனாளி ஒருவரை பின்னால் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் மாற்றுத் திறனாளி ஸ்தலத்திலேயே உயிரிழந்தார் .

இந்தச் சம்பவம் பொத்துவிலை அடுத்துள்ள கோமாரிப் பிரதேசத்தில் இன்று (9) வியாழக்கிழமை காலை 6 மணி யளவில் இடம்பெற்றுள்ளது .

விபத்தில் பலியானவர் கோமாரியைச் சேர்ந்த மாற்றுத் திறனாளி மெண்டிஸ்அப்பு விஜயஸ்ரீ(வயது 71) என்பவராவார்.

பல வருடங்களாக அவர் பிரதான வீதியில் கோமாரி மகா வித்தியாலயத்துக்கும் தபாலகத்துக்கும் இடையேயுள்ள மரத்தின் கீழ் மூன்று சில்லுச் சைக்கிளில் வந்து நிற்பது வழக்கம். செருப்பு தைப்பதும் குடை திருத்துவதும் தொழிலாக கொண்டிருந்தவர்.

இரண்டு கால்களும் இயலாத மாற்றுத் திறனாளியான அவர் இன்று மூன்று சில்லுச் சைக்கிளில் வீட்டிலிருந்து வந்து பிரதான வீதியில் கடை ஒன்றில் தேநீர் அருந்திவிட்டு




செல்லும் போது பின்னால் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் அவரின் மீது மோதியது .

அக் கணத்தில் அவர் தூக்கி எறியப்பட்டார். அந்த இடத்திலேயே அவர் மரணமானார்.

சடலம் பொத்துவில் வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளது. மேலும் விசாரணைகளைப் பொத்துவில் பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# திருப்பதி கூட்ட நெரிசலில் சிக்கி 6 பேர் உயிரிழப்பு; 30 பேர் காயம்

ஆந்திர மாநிலம் திருப்பதியில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி தமிழகத்தை சேர்ந்த இருவர் உட்பட ஆறு பேர் உயிரிழந்துள்ளனர். இதில் 30 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

ஆந்திராவின் திருப்பதியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற திருமலையில் உள்ள ஏழுமலையான் கோயிலில் வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு வைகுண்ட துவார தரிசனத்துக்கான இலவச டோக்கன் வினியோகிக்கப்படும் என திருமலை திருப்பதி தேவஸ்தான நிர்வாகம் அறிவித்திருந்தது.

இதற்காக பல்வேறு இடங்களில் 90 கவுண்டர்கள் அமைக்கப்பட்டிருந்தன. டோக்கன் இன்று காலை 5 மணி முதல் வினியோகிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

இந்த சூழலில் நேற்று இரவு இலவச தரிசன டிக்கெட்டை பெற ஆயிரக்கணக்கான பக்தர்கள் கவுண்டர்களில் திரண்டிருந்தனர். அப்போது விஷ்ணு நிவாசம், பைரகிபட்டேடா, இராமச்சந்திர புஷ்கரிணி உள்ளிட்ட கவுண்டர்களில் கூட்டம் அதிகம் இருந்தது. அந்த பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகளும் முறையாக இல்லை என தகவல் கிடைத்துள்ளது. அங்கு ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 6 பேர் உயிரிழந்தனர். சுமார் 30 இற்கும் மேற்பட்டோருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது. அவர்கள் திருப்பதியில் உள்ள அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். கூட்டத்தை கட்டுப்படுத்த முடியாமல் பொலிஸார் தவித்துள்ளனர்.

இந்த சூழலில் நேற்று புதன்கிழமை இரவு இலவச தரிசன டிக்கெட்டை பெற ஆயிரக்கணக்கான பக்தர்கள் கவுண்டர்களில் திரண்டிருந்தனர். அப்போது விஷ்ணு நிவாசம், பைரகிபட்டேடா, ராமச்சந்திர புஷ்கரிணி உள்ளிட்ட கவுண்டர்களில் கூட்டம் அதிகம் இருந்தது. அந்த பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகளும் முறையாக இல்லை என தகவல் கிடைத்துள்ளது. அங்கு ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 6 பேர் உயிரிழந்தனர். சுமார் 30 இற்கும் மேற்பட்டோருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது. அவர்கள் திருப்பதியில் உள்ள அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். கூட்டத்தை கட்டுப்படுத்த முடியாமல் பொலிஸார் தவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் பிரதமர் மோடி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில்,

“திருப்பதியில் ஏற்பட்ட கூட்ட நெரிசலை அறிந்து நான் மிகுந்த மன வேதனை அடைந்தேன். எனது எண்ணமெல்லாம் தங்கள் நெருங்கிய உறவுகளை இழந்து வாடுபவர்களுடன் உள்ளது. காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திக்கிறேன். பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆந்திர அரசு அனைத்து உதவிகளையும் வழங்கி வருகிறது.” என்று தெரிவித்துள்ளார்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், ஆந்திர மாநில முன்னாள் முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி ஆகியோரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

# விசாகப்பட்டினத்தில் நலத்திட்டம்: பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார்



விசாகப்பட்டினத்தில் 2 லட்சம் கோடி ரூபா மதிப்பிலான நலத்திட்டங்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டினார்.

பிரதமர் மோடி, நேற்று தனி விமானம் மூலம் டில்லியிலிருந்து ஆந்திர மாநிலத்திலுள்ள விசாகப் பட்டினம் விமான நிலையத்துக்கு சென்றடைந்தார். அங்கு அவரை, ஆந்திர மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு, துணை முதல்வர் பவன் கல்யாண், பா.ஜ.க. மாநில தலைவர் புரந்தேஸ்வரி, மூத்த அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

அதன் பின்னர், பிரதமர் மோடி, முதல்வர் சந்திரபாபு நாயுடு, துணை முதல்வர் பவன் கல்யாண் ஆகியோர் திறந்தவெளி ஜீப்பில் சிரிபுரம் கூட்டுச் சாலையிலிருந்து ஆந்திரா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி மைதானம் வரை நடைபெற்ற ரோட் ஷோவில் பங்கேற்றனர். வழிநெடுக அவர்கள் மீது தொண்டர்களும், பொதுமக்களும் மலர் தூவி வரவேற்றனர். பின்னர், பல்கலைக்கழக வளாகத்தில் ஏற்பாடு செய்திருந்த பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்றுப் பேசினார்.

இதைத் தொடர்ந்து 2.08 லட்சம் கோடி ரூபா மதிப்பிலான பல்வேறு நலத்திட்டங்களுக்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். விசாகப்பட்டினம் ரயில்வே மண்டலம், நவீன தொழிற்பேட்டை, பசுமை ஹைட்ரஜன் மையம் போன்ற திட்டங்கள் இதில் அடங்கும்.

அந்த விழாவில் ஆளுநர் அப்துல் நசீர், அமைச்சர் நாரா லோகேஷ், அனகாபல்லி மக்களவைத் தொகுதி எம்.பி. சி.எம்.ரமேஷ், எம்.பி.க்கள், எம்.எல்.ஏக்கள் பங்கேற்றனர்.





# லொஸ் ஏஞ்சலிஸ் காட்டுத்தீயில் இதுவரை 5 பேர் உயிரிழப்பு

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சலிஸ் பகுதியில் உள்ள 4 பிராந்தியங்களில் பரவி வரும் காட்டுத்தீ காரணமாக இதுவரையில் 5 பேர் உயிரிழந்தனர்.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட கட்டடங்கள் தீக்கிரையாகியுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த செவ்வாய்க் கிழமை முதல் பரவி வரும் இந்த தீப்பரவல், லொஸ் ஏஞ்சலிஸ் வரலாற்றில் மிகப் பெரிய தீப்பரவல் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், தீயணைப்பு பணிகளில் ஈடுபட்டுள்ள தீயணைப்பு வீரர்கள் தண்ணீர் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ளனர்.

குறிப்பாக லொஸ் ஏஞ்சலிஸின் பாலிசேட்ஸ் மற்றும் ஈட்டன் பகுதிகளில் 137,000 பேர் தங்களது இருப்பிடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.




# ஜெட் ப்ளூ விமானத்திலிருந்து சடலங்கள் மீட்கப்பட்டன

அமெரிக்கா - தெற்கு புளோரிடா விமான நிலையத்தில் தரையிறங்கிய ஜெட் ப்ளூ விமானத்தின் தரையிறங்கும் கியர் பெட்டியிலிருந்து அடையாளம் தெரியாத இரு சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த விமானம் நியூயோர்க்கில் உள்ள ஜோன் எஃப். கென்னடி சர்வதேச விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு, தெற்கு புளோரிடா விமான நிலையத்தை வந்தடைந்தது.

இந்த விமானத்தில் முன்னெடுக்கப்பட்ட பராமரிப்பு நடவடிக்கையின் போது இந்த இரு சடலங்களை அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

சடலங்கள் அடையாளம் காணப்படாத நிலையில், சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# மக்கள் தொகை வீழ்ச்சி குறித்து ஈலோன் மஸ்க் கவலை!

இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளில் குழந்தை பிறப்பு விகிதத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியானது, மனித குலத்துக்கு மிகப்பெரிய அச்சுறுத்தல் என ஈலோன் மஸ்க் கூறியுள்ளார்.

இந்தியாவின் மக்கள் தொகையானது 2100ஆம் ஆண்டளவில் 110 கோடிக்கும் கீழ் குறையும் என்றும், சீனாவின் மக்கள் தொகை 73 கோடி அளவில் இருக்கும் என்றும் சுட்டிக்காட்டும் புள்ளிவிவரம் ஒன்றைப் பகிர்ந்து மஸ்க் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.



2023ஆம் ஆண்டு புள்ளிவிவரப்படி இந்தியாவின் மக்கள் தொகை 142.86 கோடி ஆகவும், சீனாவின் மக்கள் தொகை 141.07 கோடியாகவும் உள்ளது.

அண்மையில் வெளியான ஐ.நா சபை, உலக வங்கி மற்றும் இந்திய சுகாதாரத்துறை ஆகியவற்றின் புள்ளி விவரப்படி, இந்தியாவின் சராசரி மக்கள் தொகை வளர்ச்சி 0.92 சதவீதமாக உள்ளது.

எதிர்வரும் காலங்களில் இந்த வளர்ச்சி விகிதம் மேலும் குறையும் என்று அஞ்சப்படுகிறது.

குறிப்பாக இந்தியாவில் மக்கள் தொகை வளர்ச்சியில் பின்தங்கியுள்ள தமிழகத்தில் 0.30 சதவீதம் மட்டுமே மக்கள் தொகை வளர்ச்சி இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

பக்கங்கள் 03

கனடா முரசு

வியாழக்கிழமை 09/01/2025

## கொள்ளை சம்பவம்: சிறுவன் மீது குற்றச்சாட்டு

கனடாவில் டொரன்டோவில் 13 வயது சிறுவன் ஒருவன் பல் வேறு கொள்ளை சம்பவங்களுடன் தொடர்பு பட்டுள்ளார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த சிறுவன் 02



# அமெரிக்காவின் ஒரு பகுதியாக கனடா மாறுவதற்கு வாய்ப்பில்லை

## ட்ரம்புக்கு ட்ரூடோ பதிலடி

கனடா அமெரிக்க தேசத்தின் ஒரு பகுதியாக மாற வாய்ப்பில்லை என அந்நாட்டு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் 51ஆவது மாகாணமாக கனடா இணையலாம் என ட்ரூடோ பதவி விலகிய நிலையில் அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்திருந்தார். இதற்கு ட்ரூடோ பதிலடி கொடுத்துள்ளார்.

கனடாவை அமெரிக்காவுடன் இணைக்க பொருளாதார ரீதியான அழுத்தம் தரப்படும் என ட்ரம்ப் தெரிவித்திருந்தார். 02



# ஜஸ்டின் ட்ரூடோ சகாப்தம் முடிவு!

மூன்று கூட்டாட்சித் தேர்தல்களில் வெற்றி பெற்று ஒன்பது ஆண்டுகள் பதவியில் இருந்த பின்னர் கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கடந்த திங்களன்று தனது பதவி விலகலை அறிவித்தார்.

லிபரல் கட்சிக்கான மக்கள் ஆதரவு குறைந்து வருவதையும், பல முக்கிய இடைத்தேர்தல் தோல்விகளையும் காட்டிய பல மாத வாக்கெடுப்புகளுக்குப் பின்னர், ட்ரூடோ பதவி விலக அவரது கட்சிக்குள் பெருகிய அழுத்தத்தை எதிர்கொண்டார்.

இதற்கு மத்தியில் அவரது பதவி விலகல் வந்துள்ளது.

தனது லிபரல் கட்சி புதிய தலைவரை தேர்ந்தெடுக்கும் வரை பதவியில் நீடிப்பதாகவும், மார்ச் 24 வரை நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்படும் அல்லது இடைநிறுத்தப்படும் என்று ட்ரூடோ ஒட்டாவாவில் ஊடகவியலாளர்களிடம் கூறினார்.

இப்போது, நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்படும் போது லிபரல் கட்சி புதிய தலைவரை தேர்ந்தெடுக்க வேண்டும்.

லிபரல் கட்சியின் தலைவரான இந்தோ - கனேடிய தொழிலதிபர் சச்சித் மெஹ்ரா, பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தனது இராஜினாமாவை அறிவித்ததை அடுத்து, புதிய கட்சித் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

2023 இல் கட்சியின் முன்னாள் தலைவர் மீரா அகமதுவை தோற்கடித்து பதவியை பெற்ற மெஹ்ரா, புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்கும் பணியைத் தொடங்குவதற்கு கட்சியின் பணிப்பாளர்கள் குழு கூட்டம் இந்த 02

# கொள்ளை சம்பவத்தை தடுக்கும் முயற்சியில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் படுகாயம்



கனடாவில் கொள்ளை சம்பவத்தை தடுத்து நிறுத்த முயற்சித்த போது பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

மேற்படி பொலிஸ் உத்தியோகத்தருக்கு காலில் காயம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. நோர்த்யோர்க் பகுதியில் இந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

சில சந்தேக நபர்கள் கொள்ளை முயற்சியில் ஈடுபட்டனர் எனவும் அவர்களை இந்த பொலிஸ் உத்தியோகத்தர் தடுக்க முயற்சித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடையொன்றில் இருந்து கொள்ளை முயற்சியில் ஈடுபட்ட நபர்கள் காரில் தப்பி சென்றுள்ளார் எனவும் இவ்வாறு தப்பிச் சென்றவர்கள் விபத்துக்குள்ளாகி பின்னர் அங்கிருந்து அவர்களது காரை கைவிட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும் பொலிஸார் நடத்திய விசாரணைகளின் பின்னர் நான்கு சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

## ஜஸ்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாரம் நடைபெறும் என்று கூறினார்.

இது தொடர்பில் அறிக்கை ஒன்றையும் வெளியிட்ட அவர்,

நாடு முழுவதும் உள்ள தாராளவாதிகள் எங்கள் கட்சிக்கும் நாட்டிற்கும் ஒரு தசாப்தத்திற்கும் மேலாக தலைமைத்துவத்தில் இருந்து வழிநடத்தியதற்காக ஜஸ்டின் ட்ரூடோவுக்கு மிகவும் நன்றியுள்ளவர்களாக உள்ளனர்.

பிரதமர் என்ற முறையில், அவரது தொலைநோக்கு கனேடியர்களுக்கு மாற்றத்தக்க முன்னேற்றத்தை அளித்ததாகவும் கூறினார்.

ட்ரூடோவின் இராஜினாமாவைத் தொடர்ந்து "எதுவும் மாறவில்லை" என்று கன்சர்வேடிவ் தலைவர் Pierre Poilievre கூறினார்.

ஒவ்வொரு லிபரல் எம்.பி. மற்றும் தலைமைப் போட்டியாளரும் 9 ஆண்டுகளாக ட்ரூடோ செய்த அனைத்தை விடயங்களையும் ஆதரித்தனர்.

இப்போது அவர்கள் ட்ரூடோவைப் போலவே கனேடியர்களை இன்னும் 4 ஆண்டுகளுக்கு துன்புறுத்த மற்றொரு லிபரல் முகத்தை மாற்றி வாக்காளர்களை ஏமாற்ற விரும்புகிறார்கள் என்றும் அவர் கூறினார்.

53 வயதான ட்ரூடோ தனது லிபரல் கட்சிக்குள் இருந்து வெளி யேறுவதற்கான அழைப்புகளை கடந்த சில மாதங்களில் எதிர்கொண்டார்.

இந்த அழைப்புகள் டிசம்பரில் துணைப் பிரதமரும் நீண்ட கால நண்பருமான கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட் திடீரென இராஜினாமா செய்தபோது அதிகரித்தது.

ஃப்ரீலேண்ட் தனது இராஜினாமா கடிதத்தில், "அமெரிக்க அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப் கனேடிய பொருட்கள் மீதான வரி தொடர்பாக பல அச்சுறுத்தல்களை விடுக்கிறார்.

ஆனால் ட்ரம்ப் முன்வைக்கும் இந்த 'கடுமையான சவாலை' எதிர்கொள்ள ட்ரூடோ போதுமான அளவு பணியாற்றவில்லை" என்று குற்றம் சாட்டினார்.

கனடாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு 25 வீத வரி விதிக்கப்படும் என்று ட்ரம்ப் உறுதியளித்துள்ளார்.

இது கனடாவின் பொருளாதாரத்தை கணிசமாக பாதிக்கும் என்று பொருளாதார வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.

1970 கள் மற்றும் 1980 களில் நாட்டின் அரசியலில் ஆதிக்கம் செலுத்திய கனேடிய பிரதமர் பியர் ட்ரூடோவின் மகன் ட்ரூடோ.

2015 ஆம் ஆண்டு தேர்தலில் லிபரல் கட்சி பெரும் பெரும்பான்மையைப் பெற்ற பின்னர் ட்ரூடோ பிரதமரானார்.

அவரது அமைச்சரவையில் 50 வீத பெண்களாக இருக்கும் பாலின சமத்துவத்திற்கான அர்ப்பணிப்பு, கனடாவில் உள்ள பழங்குடி மக்களுடன் நல்லிணக்கத்தில் முன்னேற்றம்; தேசிய கார்பன் வரியை கொண்டு வருவது; குடும்பங்களுக்கு வரியில்லா குழந்தை நலனை செயல்படுத்துதல்; மற்றும் பொழுதுபோக்கு கஞ்சாவை சட்டப்பூர்வமாக்குதல் என்பன அவரது சாதனையில் அடங்கும்.

இந்த நிலையில் ட்ரூடோவின் முதல் பதவிக்காலத்தில் ஊழல் முறைப்பாடுகள் எழுந்தன. அதன் பிறகு கொரோனா பெருந்தொற்று காலத்தின் தடுப்பூசி தொடர்பான ஆணைகள் மற்றும் பிற கட்டுப்பாடுகளும் சில கனேடியர்களால் கடுமையாக எதிர்க்கப்பட்டன.

இது 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், 'ஃப்ரீடம் கான்வாய் டிரக்' (Freedom Convoy truck) போராட்டங்களுக்கு வழிவகுத்தது. இறுதியில் போராட்டக்காரர்களை அகற்ற அவசரகால அதிகாரங்களைப் பயன்படுத்தினார் ட்ரூடோ.

மிக சமீபத்திய ஆண்டுகளில், கனடாவில் அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவினம் மற்றும் ட்ரூடோவின் ஆட்சி மீதான விரக்தி காரணமாக அவரின் செல்வாக்கு குறைந்துள்ளது.

## அமெரிக்காவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தாலும் இந்த விவகாரத்தில் இராணுவத்தை பயன்படுத்த போவதில்லை என திட்டவட்டமாக அவர் தெரிவித்துள்ளார். அதே நேரத்தில் ட்ரூடோவை ஆளுநர் என்றும், கனடாவை அமெரிக்காவுடன் இணைப்பது குறித்தும் கடந்த சில வாரங்களாக அவர் தொடர்ந்து பேசி வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதுதொடர்பில் ட்ரம்ப் மேலும் குறிப்பிடுகையில்,

"நிச்சயம் கனடாவை இணைக்க பொருளாதார அழுத்தம் கொடுக்கப்படும். அந்த எல்லை பகுதியை பாருங்கள் அது செயற்கையாக வரையப்பட்டது. அதோடு இந்த நகர்வு தேசத்தின் பாதுகாப்பையும் உறுதி செய்யும். அமெரிக்கா தான் கனடாவை பாதுகாக்கிறது என்பதை மறக்க வேண்டாம். அதற்காக ஒவ்வொரு ஆண்டும் பில்லியன் கணக்கில் செலவிட்டு வருகிறோம். அதனால் தான் ட்ரூடோவை ஆளுநர் என அழைக்கிறேன். அவர்களிடமிருந்து எங்களுக்கு எதுவும் வேண்டாம். எனது உத்தரவு மூலம் சிலரது தடைகளை நீக்க முடியும்.

அண்டை நாடு என்பதால் நாம் சிலவற்றை செய்து வருகிறோம். இது பழக்கத்தின் அடிப்படையினால் ஆனது. கனடா நமது மாகாணம் என்றால் அதை செய்ய நான் தயாராக உள்ளேன். அதுவே நாடு என வரும் போது இனியும் முடியாது. இந்த கேள்விகளுக்கு ட்ரூடோவிடம் பதில் இல்லை. நான் கனடா மக்களை நேசிக்கிறேன்." என்று தெரிவித்துள்ளார்.

இதற்கு பதிலடி வழங்கும் வகையில் ட்ரூடோ எக்ஸ் பதிவொன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த பதிவில் அவர் குறிப்பிடுகையில்,

"கனடா அமெரிக்காவின் பகுதியாக மாறும் வாய்ப்பு இல்லை. சமூகம் மற்றும் தொழிலாளர்கள் என இரு நாட்டு தரப்பிலும் ஒருவருக்கொருவர் வர்த்தகம் மற்றும் பாதுகாப்பு சார்ந்து கூட்டாளிகளாக இருப்பதன் மூலம் பலன் அடைந்து வருகின்றனர்." என்று தெரிவித்துள்ளார்.

## கொள்ளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர் கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்டுள்ளார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சிறுவன் ஒரே நாளில் நான்கு கொள்ளை சம்பவங்களை மேற்கொண்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

முகமூடி அணிந்து கொண்டு துப்பாக்கி முனையில் மிரட்டி கொள்ளையிட்டு உள்ளார் என பொலிஸார் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்த சிறுவன் மற்றும் ஒரு நபருடன் இணைந்து கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்டுள்ளார் என விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது. இந்த சிறுவனுக்கு வாகன கொள்ளை சம்பவங்களுடனும் தொடர்பு இருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.



# ட்ரூடோவை நண்பர் என்று அழைப்பதில் பெருமிதம் கொள்கின்றேன்: ஜோ பைடன்

பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவை நண்பர் என்று அழைப்பதில் பெருமிதம் கொள்கின்றேன் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

இருவரும் இப்போது தலைமைப் பதவியிலிருந்து விலகத் தயாராகி வரும் நிலையில் பைடன் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

கட்சியின் புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் தனது பதவியை இராஜினாமா செய்வதாக பிரதமர் ட்ரூடோ அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து ட்ரூடோவுடன் தாம் தொலைபேசியில் பேசியதாக பைடன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட டொனால்ட் ட்ரம்ப் இரண்டாவது தடவையாக தனது பதவியை பொறுப்பேற்கும் போது ஜனாதிபதி பைடன் இந்த மாத இறுதியில் வெள்ளை மாளிகையை விட்டு வெளியேற உள்ளார்.

தாம் ஜனாதிபதியாக தெரிவானதன் பின்னர் ட்ரூடோ முதலில் வாழ்த்து கூறினார் என பைடன் நினைவுபடுத்தியுள்ளார்.

காலநிலை மாற்றம் கொவிட் 19 பெருந்தொற்று உள்ளிட்ட பல்வேறு சவால்களை தாம் இருவரும் இணைந்து எதிர்கொள்ள நேரிட்டதாக பைடன் தெரிவித்துள்ளார்.

# ட்ரூடோவின் பதவி விலகல் அறிவிப்பால் கேள்விக்குறியாகும் கனடாவின் எதிர்காலம்





ஒன்பது ஆண்டுகளாகக் கனடா பிரதமராக பதவி வகித்து வந்த ஜஸ்டின் ட்ரூடோவின், பதவி விலகல் அறிவிப்பு அந்நாட்டின் எதிர்காலத்தை பாதிக்குமா என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த 2015ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கனடா நாட்டின் பிரதமராக பொறுப்பேற்ற ஜஸ்டின் ட்ரூடோ, ஒரு காலத்தில் கனடா நாட்டு மக்கள் விரும்பும் தலைவராக காணப்பட்டுள்ளார்.

தாராளமயக் கொள்கைக்காக ஆரம்ப கட்டத்தில் அவர் பாராட்டப்பட்டாலும், பணவீக்கம் அதிகரிப்பு , வீட்டுவசதி நெருக்கடி, வெளிநாட்டினர் குடியேற்றம் அதிகரிப்பு போன்ற பிற பிரச்சினைகள் காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளாக மக்களிடையே அவருக்கு இருந்த செல்வாக்கு குறைந்துள்ளது.

இந்நிலையில், உள்நாட்டு அரசியல் நெருக்கடி மற்றும் மக்களிடையே குறைந்த ஆதரவு போன்ற காரணிகளினால் ட்ரூடோ பதவி விலகியதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது, நேற்று உரையாற்றிய ஜஸ்டின் ட்ரூடோ,

"கட்சி தனது அடுத்த வலுவான தலைவரை, நாடு தழுவிய தேர்தல் மூலம் தேர்ந்தெடுத்த பிறகு, நான் கட்சித் தலைவர் பதவியையும், பிரதமர் பதவியையும் விட்டு விலக விரும்புகிறேன்.

நான் கட்சிக்குள்ளேயே போரிட வேண்டியிருந்தால், அந்தத் தேர்தலில் நான் சிறந்த தேர்வாக இருக்க முடியாது என்பது எனக்குத் தெளிவாகிவிட்டது.

நமது கட்சிக்கும் நாட்டிற்கும் மிகவும் முக்கியமான விஷயங்களுக்காகப் போராடுவதில் இருந்து எப்போதும் பின்வாங்க மாட்டேன் என்பதுடன் கனேடியர்களின் நலன்களுக்காகவும் ஜனநாயகத்தின் நலனுக்காகவும் இந்த முடிவை எடுத்துள்ளேன்" என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, லிபரல் கட்சியைச் சேர்ந்த இந்திய வம்சாவளியினரான அனிதா ஆனந்துக்கு கனடாவின் அடுத்த பிரதமராகும் வாய்ப்புகள் அதிகம் காணப்படுவதாக கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.